# நடையர் புராணம்

**சி**வா என்று அழைக்கப்படுகின்ற சிவநேசன் சிட்னியிலுள்ள அனேகமான தமிழர்களைப்போல ஒரு பொறியியலாளர். இவர்தான் நடையரை சிட்னிக்கழைத்த அவரின் ஒரேயெரரு மகன். மற்ற தமிழ் பொறியிலாளர்கள் போலவே சிவாவும் சிட்னி வாட்டரில்தான் பணிபுரிகிறார். அடிக்கடி நடக்கின்ற சிட்னி வாட்டரின் நிர்வாகமாற்றங்கள் சிவாவை நிறையவே குழப்பியபோதும் நடையரின் வருகைக்குப் பின்னர் அவருடைய மூளையை அதிகம் பாதித்தது சிட்னிவாட்டரின் நிர்வாகக் குழப்பங்களல்ல. நடையரை சிட்னி தமிழ் கலாச்சாரத்துக்கு இசைவாக்கம் செய்வது சிவா எதிர்பார்த்ததைவிட கடுமையான பணியாயிருந்தது. என்றாலும் சற்றும் மனம் தளராமல் தினமும் யாழ்ப்பாண செம்பாட்டு மண்ணில் வேர்விட்ட முருங்கையிலிலுந்து வேதாளத்தை சிட்னிக்கு இறக்குவதில் சிவா தொடர்ந்து முயன்றுகொண்டுதான் இருக்கிறார்.

இந்தக் கண்டறியாத ஊருக்கு என்னை ஏன் கூட்டிக்கொண்டந்தனி. என்னை அங்கையே சாகவிட்டிருக்கலாம் என்று நடையர் புறுபுறுக்காத நாளே இல்லை. நடையர் வீட்டுக்குள் வந்து இறங்கின அன்றே அன்பு மனைவி புனிதாவின் நெறிப்படுத்தலில் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டிய சில கட்டளைகளை சிவா நடையருக்கு தெரியப்படுத்தினார். இதில் முக்கியமானதும் கடினமானதுமான கட்டளை பின்வருமாறு அமைந்திருந்தது.

மூத்த மகன் அருணைப் பள்ளிக்கூடத்துக்கு கூட்டிக்கொண்டுபோய் கூட்டிக்கொண்டு வருவதைத்தவிர வேறு எந்தக் காரணம்கொண்டும் வீட்டுவாசல் கதவைத்தாண்டக்கூடாது.

நடையருக்கு ஆங்கிலம் வராததால் அவரை பிறசமூகத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கமாக இக்கட்டளை உருவானதாக விளக்கமளிக்கப்பட்டது. நடையர் கடந்த இருபது வருடமாக கணக்கு வழக்கில்லாத கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஈழத்தில் வாழப்பழகிக்கொண்டபோதும் இந்தக் கட்டளை அவர் தலையில் இடி மின்னல் முழக்கம் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் இறக்கியது. இரு எழும்பு ஓடு என்ற கட்டளைகள்தான் ஊரில்வரும். நடையரை நடக்கவேண்டாமென்பதைவிட மூச்சு விடவேண்டாமென்று சொல்லியிருக்கலாம். பின்னர் நடையரின் பிறப்பியல்பை உத்தேசித்து பேரன் அருண் பிரேக்க புனிதாவின் ஆமோதித்தலில் பின் வளவில் குறுக்கும் நெறுக்குமாக நடக்கலாம் என கட்டளையின் விஷேச பின்னிணைப்பில் பரிந்துரை செய்யப்பட்டது.

ஆனால் நடையரின் நடைக்கு நாலு வளவுகளின் பின் வேலிகளைத் தறித்தால்தான் இடம்வாய்க்கும். அத்தோடு நடையர் நடைக்காக நடந்தவரில்லை. வேலை நிமித்தம் நடந்து பழக்கப்பட்டவர். ஒரு குறிக்கோள் இல்லாமல் குட்டிபோட்ட நாய் மாதிரி பத்து மீற்றருக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடக்கும்போது அவருக்கே அவரில் இரக்கம் வந்தது. இவர் நடக்கத் துவங்கும்போதெல்லாம் அயல்வீட்டு நாய் குரைக்கத் துவங்கியது.
கொஞ்சநாள்செல்ல பழகிப்போனதாலோ அல்லது நடையரின் அவலத்தை கண்டு இரங்கியோ நாய் குரைப்பதை நிறுத்திக்கொண்டது. நாய் குரைத்ததையும் பின்னர் நிறுத்தியதையும் நடையர் புனிதாவுக்கு அறிக்கையிட்டார். இது புதிய வில்லங்கத்தை தரலாம் என புனிதா கிலேசமடைந்தார். அயல்வீட்டு புதுவரவால் தங்கள் நாயின் மனநலம் பாதிக்கப்படுகிறது என அவர்கள் கவுன்சிலுக்கு முறையிடும் சாத்தியக்கூறு இருப்பதாக எண்ணினார். வெள்ளைக்காரருக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது என்று யாருக்குத் தெரியும். அவசர முடிவெடுத்து சிவாவினூடாக நடையருக்கு உபதேசம் துவங்கியது..

ஏன் எந்த நேரமும் நடக்கிறியள். கொஞ்சம் நடந்தால் உடம்புக்கு நல்லது. இப்பிடி எந்த நேரமும் நடந்தால் இந்த வயதிலை நல்லதில்லை அப்பிடித்தான் டொக்ரர்மார் சொல்லுகினம். ஆதரவாகச் சொன்னார் சிவா.

“நாய் கூட என்ரை நடையை சகிக்கத்துவங்கிவிட்டுது. உங்களுக்கு என்ன பிரச்சனை. எனக்கு சும்மா கதிரையிலை குந்தியிருந்து பழக்கமில்லை. கதிரையிலை இருந்து நான் என்ன செய்யிறது”

“ஏன் ரிவியை பாருங்கோவன்” புனிதா ஒத்தூதினார்.

**சந்திரஹாசன்**

“எனக்கு உந்த இங்கிலிஸ் ரிவியிலை ஒரு கோதாரியும் விழங்கேல்லை”
இந்தச் சம்பாசணையில் இடையிட்டு குறுக்கிட்ட அருண்

“ஏன் எங்கடை அம்மா விழங்கியே பாக்கிறா அந்தமாதிரி தாத்தாவும் பாக்கலாம்தானே.”

எனக்கு விழங்கேல்லை எண்டு உனக்கென்னண்டு தெரியும். அருண்! நீ பெரியவை பேசிறதைக் கேக்காமல்போய் ஹோம்வேக்கை செய். மாமானாருக்கு முன்னால் மானத்தை வாங்கி ஈன்றபொழுதில் பெற்ற வலியைவிட பெரிய வலியை இப்போது அருண் தந்துவிட்டதாக புனிதா உணர்ந்தாள்.

“அப்பிடி எண்டால் சிகரம் ரிவியை எடுப்போமே புனிதா?” விண்ணப்பத்தை பணிவோடு முன்வைத்தார் சிவா.

அதுக்கு காசுக்கெங்கை போறது.. வாற பில்லுகளை கட்டவே சம்பளம் காணாமல் இருக்கு. இதுக்கிள்ளை ரிவிக்கும் கட்டுறதெண்டால் ஏலுமே”

“இல்லை. தமிழ் ரிவி வளர உதவி செய்த மாதிரியும் இருக்கும். அப்பாவுக்கு பொழுதுபோன மாதிரியும் இருக்கும்..”

நீண்ட மந்திரலோசனையின் பின்னர் தீர்மானம் நிறைவேறி சிகரம் புனிதா வீட்டு ரிவியில் வந்திறங்கியது. வந்த புதிதில் இளம் பொடியளும் பெட்டைகளும் அரைகுறையாடைகளுடன் ஓடியாடுவதை திரும்பத்திரும்ப பார்க்க அருவருப்பாய் இருந்தது. இதைவிட அவர் இங்கிலீசையே பார்த்திருக்கலாம்.. ஆனால் நாளாக நாளாக நல்ல நிகழ்ச்சிகள்



வரத்துவங்கியது. இப்போதெல்லாம் நடையரைவிட சிவாவும் புனிதாவுமே அதிகம் சிகரம் பார்க்கிறார்கள். நடையர் தனது வாழ்வில் அதிகநேரம் தொடர்ந்து இருந்த சாதனையை சிகரமூடாக நிகழ்த்திக்காட்டினார்.

சிகரத்தோடு நடையையும் மறந்தார் நடையர். அவர் சிட்னி தமிழ் கலாசாரத்துள் இசைவாகிக்கொண்டிருந்த வேளையிலை ஆரும் எதிர்பாராத வகையிலை திடுதிடுப்பென சிகரம் நின்றுபோனது. நடையரைவிட இது புனிதாவுக்கும் சிவாவுக்கும்தான் அதிக கவலையை தந்தது. அதில் வந்த ஓரளவுக்கு நடுநிலையான சக்தியின் செய்திகளும் சிங்கப்பூர் நாடகங்களும் புலம்பெயர்ந்த தமிழரின் நிகழ்வுகளும் உள்ளூர் நிகழ்ச்சிகளும் சிவா புனிதாவுடைய எதிர்பார்ப்புக்களை திருப்திசெய்துகொண்டிருந்த வேளையிலேயே சடுதியாக நிறுத்தப்பட்டது.

இப்போது அதே ரிவியில் மீண்டும் தமிழ் நிகழ்ச்சிகள் வர, சிகரம்தான் வேறு பெயரில் வருகிறதோ என்ற ஆர்வத்தில் மூவரும் ரிவிக்குள் மீண்டும் புதைந்தனர். ஆனால் பரிதாபம், புகுந்த வேகத்திலேயே அவர்கள் தூக்கியெறியப்பட்டார்கள். இதிலே பழையவர்கள் இல்லை என ஒவ்வொரு படச்சட்டமும் தெளிவாகப் பறையடிக்கிறது. பிரச்சாரமும் மூன்றாம்தர தமிழ்சினிமாக்களும் சில அழுதுவடியும் இந்திய ரெலிராமாக்களும் தரமில்லாத தொழில்நுட்பத்தோடு தரிசனம் தருகிறது. சிகரத்தூடாக வளர்ந்த கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் என்ன நடந்தது என சிவா விசனப்பட்டார். ஆர்வமும் திறமையும் மிக்கவர்களை புறம்தள்ளி அரைவேக்காடுகள் மேலோங்குவதன் தாற்பரியத்தை புரிந்துகொள்ள நேற்றுவரை ஊரிலிருந்த நடையருக்கு அதிகநேரமெடுக்கவில்லை.

SRI THAKSHANA ENETERPRISES (STE)

- Whole sales and retail dealers of best quality srilankan, indian food and spices.
- Home entertainments's video movies tamil, malayalam & hindi.
- Variety of tamil teledramas of your choice.
- VCD, DVD, Audio CD's & audio cassetts for sales.
- Tamil, sinhala, english weekend newspapers & magazines.
-Discount phone cards for India, Sri Lanka, Pakistan, Bangaladesh and Nepal.

R.SRI RANJAN
Managing director

(BELL TOWER- Shop 11)
191 Parramatta Road,
AUBURN,
NSW 2144
AUSTRALIA.

Phone: (02) 96485418
Mobile: 0417069550
Fax : (02)97481404

No 7 Joyce Street
PENDLE HILL
NSW 2145
AUSTRALIA.

Phone: (02) 96881819
Mobile: 0417069550
Fax : (02)97481404